பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 12 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஏழாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்ற தொடங்கி வைக்கிறார்.
2. பேரிடர் மேலாண்மை மசோதா மக்களவையில் நேற்று நிறைவேறியது.
3. இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் 12 சுகோ-30 எம் கே எல் ரக போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.
4. தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயூஷ் ஷெட்டி-யும், ஸ்ரீயான்சி வளிஷெட்டி-யும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஏழாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்ற தொடங்கி வைக்கிறார்.

பத்து புதிய சாலை மேம்பாலங்கள், மலைப்பகுதிகள் மற்றும் ஆற்றின் கரையோரங்களில் சாலைகள் அமைப்பதற்கான திட்டங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

கங்கை புனித நதியை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைளை விரைவுபடுத்தும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் நிலையங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

அத்துடன் குடிநீர் மற்றும் மின்சாரம் தொடர்புடைய உள்கட்டமைப்பு திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பரத்வாஜ் ஆஸ்ரம வழித்தடம், ஸ்ரிங் வெர்ப்பூர் கோவில் நடைபாதை உள்ளிட்டவற்றையும் அவர் திறந்து வைக்கிறார்.

மகா கும்பமேளா நிகழ்ச்சிகள் குறித்த விவர குறிப்புகள் மற்றும் புதிய தகவல்களை அளிப்பதற்கான சேட் போட்-யையம் திரு நரேந்திரமோடி வெளியிடுகிறார்.

நண்பகலில் திரிவேணி சங்கமத்தில் தரிசனம் செய்யும் திரு நரேந்திரமோடி, மகா கும்பமேளா நடைபெறும் இடத்தை பார்வையிடுகிறார்.,

**[]<<<>>>[]**

பேரிடர் மேலாண்மை மசோதா மக்களவையில் நேற்று நிறைவேறியது.

இதன் மூலம் தேசிய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாநில அளவில் பேரிடர் தடுப்புத் தொடர்பான திட்டங்களை இந்த ஆணையங்கள் தயாரிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மாநில தலைநகரங்கள் மற்றும் நகரங்களில் தனியாக நகர்புற பேரிடர் மேலாண்மை ஆணையத்தை மாநில அரசுகள் அமைப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு நித்தியானந்த் ராய் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் 12 சுகோ-30 எம் கே எல் ரக போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் விமானப்படையின் திறன் வலுப்படுத்தப்படும் என்று அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் 62 சதவீதம் அளவிற்கான உபகரணங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

[]<<<>>>[]

நாட்டில் ஆறு லட்சத்து 44 ஆயிரம் கிராமங்களில் ஆறு லட்சத்து 22 ஆயிரம் கிராமங்களில் செல்போன் சேவை வசதி கிடைக்கப்பெற்றுள்ளதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாட்டில் ஊரக மற்றும் மலைப்பகுதிகளில் செல்போன் கோபுரங்களை நிறுவுவதன் மூலம் தொலைத் தொடர்பு இணைப்பை விரிவுபடுத்துவதற்கான பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாகக் கூறியுள்ளார்.

தற்போது வரை அப்பகுதிகளில் ஆயிரத்து 18 செல்போன் கோபுரங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஆன்மீகத் தலங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் எட்டு கோவில்கள் புரனமைக்கப்பட உள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதைத் தெரிவித்த அவர். தஞ்சாவூர் மாவட்டம் திங்களூரில் உள்ள கைலாசநாதர் கோவில், ஆலங்குடி குருபகவான் கோவில், தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வரம் நாகநாதர் திருக்கோவில், மயிடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவில், கீழப்பெரும்பள்ளத்தில் உள்ள நாகநாதசுவாமி கோவில் உள்ளிட்ட எட்டு கோவில்கள் புனரமைக்கப்பட உள்ளதாக கூறியுள்ளார்.

கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய வகை பிரிவின் கீழ் தஞ்சாவூரில் 25 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் 21 பேர் கொண்ட முதலாவது வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

அதன்படி தில்லி பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு தேவேந்திரயாதவ், பட்லி தொகுதியிலும், திரு சந்தீப் தீட்ஷித் புதுதில்லி தொகுதியிலும், திரு ஹாரூன் யூசுப் - பல்லமரா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

[]<<<>>>[]

மத்திய பிரதேசத்தில் டாக்டர் மோகன் யாதவ் தலைமையிலான பிஜேபி ஆட்சி அமைத்து இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

இதையொட்டி அடுத்த மாதம் 26-ஆம் தேதி வரை மாநிலம் முழுவதும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஓராண்டு காலத்தில் மக்கள்நலன் சார்ந்த திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் தெரிவித்துள்ளர்.

மாநிலத்தின் பொருளாதாரத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் இருமடங்காக உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் அதிகனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ----- 42 செகண்ட்*

இதனிடையே மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று பரவலாக நல்ல மழை பெய்துள்ளது,

கனமழை எச்சரிக்கையை அடுத்து நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, தஞ்சாவூர், திருச்சி, விழுப்புரம், அரியலூர் மாவட்டங்களில் இன்று பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது,

மயிலாடுதுறை, மதுரை, புதுக்கோட்டை, திருவாரூர், விருதுநகர், ராமநாதபுரம் திண்டுக்கல், தேனி, கடலூர், சேலம், தருமபுரி, நாமக்கல் கரூர் நாகப்பட்டினம், மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் கொசஸ்தலை ஆற்றில் விநாடிக்கு ஐயாயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதன் காரணமாக கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஆற்றின் கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கனமழை காரணமாக புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இன்று பள்ளிக் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டத்தில் இன்று அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளநிலையில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல்லை மாவட்டத்தில் நதிநீர் இணைப்புத் திட்டம் அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று கூறினார்.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று இரவு நேரிட்ட தீ விபத்தில் ஒரு சிறுமி உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்கள் திண்டுக்கல் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து குறித்த தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் மருத்துவமனைக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டதுடன், மருத்துவமனையில் சிசிச்சை பெற்று வந்தவர்களையும் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் திருக்கார்த்திகை திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

தீபத்திருழாவின் முக்கிய நிகழ்வாக இன்று மாலை ஆறு மணிக்கு மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இன்று அதிகாலை ஆலயத்தில் பரணி தீபம் ஏற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தீபத்திருவிழாவையொட்டி இன்று முதல் மூன்று நாட்களுக்கு சென்னை தாம்பரம், விழுப்புரம், காட்பாடி ஆகிய ரயில் நிலையங்களிலிருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயூஷ் ஷெட்டி, ஸ்ரீயான்சி வளிஷெட்டி ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்,

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஆயூஷ் ஷெட்டி 21-16, 21-16 என்ற செட் கணக்கில் சீனாவின் ஸ்வான் சென் ஜூவை வென்றார்.,

மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்ரீயான்சி வளிஷெட்டி 21-15, 8-21, 21-19 என்ற செட் கணக்கில் சீனாவின் வாங் டே-யை வென்றார்.

**[]<<<>>>[]**

ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் ஒடிஸா இரண்டு– ஒன்று என்ற கோல்கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் ஆட்டத்தில் தில்லி அணி – தெலுகு அணியை வென்றது.

உத்திரபிரதேசம் - பெங்கால் அணிகளுக்கு இடையேயான போட்டி ட்ராவில் முடிவடைந்தது.

***End of News***